விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 24
ஒலி 015 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை (03.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# 2023 மிகவும் கடுமையானது

## சர்வதேச நாணய நிதியம் உலக நாடுகளுக்கு எச்சரிக்கை



(வோஷிங்டன்)

கடந்த ஆண்டை விட 2023ஆம் ஆண்டு முழு உலகுக்கும் மிகவும் கடினமான ஆண்டாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதானி கிறிஸ்டலினா ஜீயோஜிவா கூறியுள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

# முட்டையை இறக்குமதி செய்ய அனுமதி

## அமைச்சரவை அதிரடி தீர்மானம்

(கொழும்பு)

சந்தையில் பெருமளவு அதிகரித்துள்ள முட்டையின் விலையைக் கட் 11

# மின் கட்டணத்தை அதிகரிக்கும் யோசனை

## ஒரு வாரத்துக்கு அமைச்சரவையால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

மின் கட்டணத்தை மேலும் அதிகரிப்பது தொடர்பான இறுதி முடிவு 11

### யாழ்.கொழும்புத்துறையில்

# விபரீத முடிவெடுத்த 19 வயது மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் விபரீத முடிவெடுத்த 19 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. 11

# சுவாச குழாயில் கிருமித் தொற்று

## யாழில் 2 மாத ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

சுவாச குழாயின் மேற்பகுதியில் கிருமித் தொற்றால் சளி கட்டி ஏற்பட்டு அதனால் மூச்சடைத்து இரண்டு மாத ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. 11

### நாட்டை வழமைக்கு கொண்டுவர

# ஒன்றிணைந்து செயற்படுங்கள்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த வருடத்தின் இறுதிக்குள் நாட்டை வழமையான நிலைக்கு கொண்டுவருவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

# ஜனவரி மாத இறுதிக்குள் அமைச்சரவை மாற்றம்

## அரசியல் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனவரி மாத இறுதிக்குள் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட இருப்பதோடு ஆறு மாகாணங்களுக்கான ஆளுநர்களையும் நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி 11

# மண்ணெண்ணெய், டீசல் விலைகள் குறைக்கப்பட்டன

(கொழும்பு)

மண்ணெண்ணெய், டீசல் விலைகள் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று அமுலுக்கு வரும் வகையில் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 11

# நாட்டின் பங்காளிகளாக அனைவரும் செயற்பட வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாட்டின் பங்காளர்களாக அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று காலை பிரதமர் அலுவலகத்தில் அரச ஊழியர்கள்,, பணிகளை 11

### வடமராட்சி வத்திராயனில்

# நாய் இழுத்துச் சென்ற சிசுவின் சடலம் மீட்பு



(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் கிராமத்தில் நாய் இழுத்துச் சென்ற 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## 31ஆம் நாளில் துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர் யோ.மகிழ்னன்
அவர்களின் அன்பு மாமியார்

### அமரர் சேதுகாவலன் பத்மாவதி

தோற்றம் 17.04.1939 மறைவு 04.12.2022

அவர்கள் 04.12.2022 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5724)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## 31ஆம் நாளில் துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி
லவப்பிரியா மயூரன் அவர்களின் அன்பு தந்தையார்

### அமரர் ஆறுமுகம் விக்கினேஸ்வரமூர்த்தி



தோற்றம் 1963.08.17 மறைவு 2022.12.04

அவர்கள் 04.12.2022 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5725)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் கணித பாட
ஆசிரியர் திரு. து.விஜயபிரகாஷ்
அவர்களின் அன்புத் தந்தை

### திரு. நாகமுத்து துரையன்

அவரது மறைவுச் செய்தி அறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 05.04.1940 மறைவு 01.01.2023

(C-5727)

**யா/மகாஜனக் கல்லூரி**
**தெல்லிப்பளை**

## நினைவஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி சசிகலா பாலமுகுந்தன்
அவர்களின் அன்பு தந்தையார்

### அமரர் இராசையா சந்திரசேகரன்

அவர்கள் 20.10.2022 அன்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5726)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

# பாற்சோறு இல்லாத 13 வருடங்கள் – சந்தியா



(கொழும்பு)

தங்கள் தலைக்கு மேலே ஈ கூட பறக்க முடியாது என நினைத்துக் கொண்டிருந்தவர்களை இல்லாமல் செய்த ஆண்டு 2022 என காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா தனது முகநூல் பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி - எங்கள் வீட்டில் பாற்சோறு இல்லாத 13 வருடங்கள். இந்த 13 வருடங்களில் 2022ம் ஆண்டே மிகச்சிறந்த வருடம் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்.

தங்கள் தலைக்கு மேலே ஈ கூட பறக்க முடியாது என நினைத்தவர்களை தங்களை மன்னர் என நினைத்துக் கொண்டிருந்தவர்களை துவம்சம் செய்த வருடம் இது.

இதன் காரணமாகவே நான் 2023ம் ஆண்டு 2022 ஐ போன்று காணப்பட வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

(ம-7)

## 60வது அகவையில் மணிவிழா வாழ்த்து



யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் 9 வருடங்கள் சங்கீத பாட ஆசிரியையாகவும் தமது வாழ்வில் 30 வருடங்கள் அளப்பரிய கல்விச்சேவையாற்றி 31.12.2022இல் ஓய்வுபெற்ற

### திருமதி இராசமலர் ஞானகுரு

(இசைக்கலைமாணி, யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

**சேவை விபரம்**
- காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி 11.01.1993 – 23.06.1997
- யா/இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி 24.06.1997 – 31.12.2003
- யா/சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை 01.01.2004 – 31.12.2013
- யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி 01.01.2014 – 25.03.2014
- யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி 26.03.2014 – 31.12.2022

யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் 10 வருடங்கள் தமிழ்ப் பாட ஆசிரியையாகவும் தமது வாழ்வில் 34 ஆண்டுகள் அளப்பரிய கல்விச் சேவையாற்றி 02.01.2023இல் அகவை 60இல் ஓய்வுபெறும்

### திருமதி ஜெயதாரணி கிருபாகரன்

(கலைமாணி, பட்டப்பின் கல்வி டிப்ளோமா, யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்



**சேவை விபரம்**
- யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை 17.08.1988 – 14.06.1994
- சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 15.06.1994 – 30.06.2013
- யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் 01.07.2013 – 02.01.2023

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

(14107)


## பணியாளர்கள் தேவை

- முகாமையாளர் Manger
- வடிவமைப்பாளர் Designer
- வரவேற்பாளர் Receptionist

அனுபவம் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.

SMART DIGITAL PRINTING
#255, Stanley Road, Jaffna.
Tel : 021 221 2958, Mob : 07 1650 1650,
e.mail : smartjaffna@gmail.com

(14113)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான இலங்கைக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

## ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கிய வருடமான 2023 ஆம் ஆண்டில், தமது பொறுப்புகளை எவரும் தட்டிக்கழிக்கக் கூடாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய வருடத்தில் வளமான இலங்கைக்காக ஒன்றிணைந்து தம்மை அர்ப்பணிக்குமாறு அனைத்து அரச ஊழியர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,2023 புத்தாண்டில் ஜனாதிபதி அலுவலக ஊழியர்களுடன் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் வீழ்ச்சியடைந்து, பொருளாதாரம் உடைந்து வீழ்ந்திருந்த சந்தர்ப்பத்தில், நாட்டை வழமைக்குக் கொண்டுவர இந்த ஐந்தரை மாதங்களில் நடவடிக்கை எடுத்தோம். நமது பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. ஆனால் இன்று தேவைக்கேற்ப எரிபொருள், எரிவாயு, உணவுப் பொருட்கள், உரங்கள் ஆகியவற்றை வழங்கும் திறனைப் பெற்றுள்ளோம்.

இந்த ஐந்தரை மாதங்களில் இதற்காக நீங்கள் அனைவரும் வழங்கிய ஆதரவுக்கு எனது நன்றிகள். எங்கள் திட்டம் இத்துடன் முடிந்துவிடவில்லை. 2023ஆம் ஆண்டு மிக முக்கியமானது.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை செயற்படுத்தி, நாட்டை கடன் சுமையிலிருந்து விடுவித்து நாம் முன்னேற வேண்டும். நவீன உலகத்துடன் போட்டியிடக் கூடிய பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

நாட்டின் அரசியல் முறைமையில் மாற்றம் தேவை என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். இந்த இரண்டு விடயங்களையும் நாம் நிறைவேற்ற வேண்டும். தற்போதுள்ள அரசியல் முறைமையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இதற்காக கடந்த ஆண்டைவிட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த நாட்டில் சாதாரண சூழ்நிலையை உருவாக்கி, உங்கள் அனைவரின் ஆதரவுடன் இந்த நாட்டை முன்னோக்கி வழிநடத்த நான் எதிர்பார்க்கின்றேன்." என அவர் தெரிவித்தார். (நி)

# அரசுக்கு எதிராக மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

(கொழும்பு)

**மார்ச் மாதமளவில் அரசுக்கு எதிராக மீண்டும் மக்களின் போராட்டம் தலைதூக்கும் என்று புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் மேலும் கூறியதாவது.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை இவ்வார காலத்துக்குள் ஸ்தாபிப்போம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும் பிற்போட முடியாது. அடுத்த மாதம் நிச்சயம் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்த நிதி இல்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேர்தலை நடத்த வரவு - செலவு திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக அரசு எடுக்கும் தீர்மானங்கள் அனைத்தும் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் காணப்படுகின்றது.

சமூக பாதுகாப்பு அறவீட்டுத் தொகை வரி மக்களின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின் கட்டணத்தை மீண்டும் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பைத் தவிர்த்து வேறு திட்டம் ஏதும் கிடையாது என மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிடுவது வேடிக்கையாக உள்ளது.

மின் கட்டணத்தை மீண்டும் அதிகரித்தால் சிறு மற்றும் நடுத்தர தொழிற்றுறை முழுமையாகப் பாதிக்கப்படும். மக்கள் பொருளாதார ரீதியில் மேலும் பாதிக்கப்படுவார்கள். இவ்வாறான பின்னணியில் நாட்டில் 'எதிர்வரும் மார்ச் மாதமளவில் அரசுக்கு எதிராக மீண்டும் மக்களின் போராட்டம் தலைதூக்கும்" என அவர் தெரிவித்தார். (நி)

# பெற்ற கடனை மீளளிப்பதில் சிக்கல் செயற்படுத்தப்படவுள்ள நிவாரண திட்டம்

(கொழும்பு)

வணிக வங்கிகளில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதில் சிரமங்களை எதிர் நோக்கும் மக்களுக்கு நிவாரணத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

கடன் பெற்றவர்கள் கோரும் வகையில் கடன்களை செலுத்துவதற்கு வசதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள 43 இலட்ச குடும்பங்கள் அரசாங்கத்திடம் நிவாரண உதவியை கோரியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் குறிப்பாக வரி அறவிடல் ஊடாகவே நிவாரணம் வழங்க முடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொருளாதார மட்டத்தில் உயர் நிலையில் உள்ள 10 சதவீதமானோரிடமிருந்து உதவிகளை பெற்று நடுத்தர அல்லது ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய வரிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

அரச வருமானத்தை 14 சதவீதமாக தக்கவைத்துக் கொள்ள பெறுமதி சேர் வரி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# மருந்துப் பற்றாக்குறைகளுக்கு விரைவில் தீர்வு- சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு இந்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் தீர்வு காணப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருடத்திற்காக சுகாதார அமைச்சுக்கு பெருமளவு நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்திய கடன் உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்கள் நாட்டில் மருந்துப் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான ஆதரவை வழங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க மருந்து நிறுவனங்களுக்கு 15 பில்லியன் ரூபாவும், இரண்டு அரச வங்கிகளுக்கு 16 பில்லியன் ரூபாவும் உள்ளடங்களாக சுகாதார அமைச்சு 52 பில்லியன் கடனில் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# செவித்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கும் மார்ச் மாதத்தின் பின் ஓட்டுநர் உரிமம்

(கொழும்பு)

செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் இந்த வருடம் மார்ச் மாதத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.




செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கான இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம் வழங்கும் முன்னோடித் திட்டம் கம்பஹா மாவட்டத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் நாடளாவிய ரீதியில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (நி)

## எந்த ஒரு அரசியல் தீர்வும்

# தமிழர் தேசத்தை பாதுகாப்பதாக இருக்க வேண்டும்- உருத்திரகுமாரன்

(லண்டன்)

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சிங்களத்தின் இனவழிப்பில் இருந்து ஈழத்தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய அரசியல், பொருளாதார, பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இறுகப் பிணைக்கப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையினை கருத்தில் கொண்டு அரசியல் தீர்வானது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அமையாத ஏற்பாடு எதுவும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையப் போவதில்லை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கிடையில் தீர்வு காணப்படும் என்ற அறிவிப்பு இலங்கை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டமை சில மட்டங்களில் ஆரவாரங்களையும் விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளமையினை அவதானிக்க முடிவதோடு, இது கேலிக்கும் நகைப்புக்கும் உரியதோர் அறிவிப்பு என்பதனை அரசியல் புரிந்தோர் அனைவரும் அறிவர். இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையினை எவ்வளவு தரம் தாழ்த்தி வெளிப்படுத்தவே ஜனாதிபதி ரணில் விரும்புகிறார் என்பதனை இவ் அறிவித்தல் ஊடாக நாம் புரிந்து கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்சியா-நொட்டின்ஹொம் போட்டி சமநிலையில் நிறைவு

பிரீமியர் லீக் கால்பந்து தொடரின் எட்டாவது கட்டப் போட்டியின் நொட்டிங்ஹொம் பொரஸ்ட் மற்றும் செல்சியா அணிஞக்கிடையிலான போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதில் நொட்டிங்ஹொம் பொரஸ்ட் அணி சார்பில், செர்ஜ் ஆரியர் 63 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் ராஹிம் ஸ்டெயர்லிங் 16 ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

தற்போதைய புள்ளிவிபர பட்டியலின்படி, செல்சியா அணி 25 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும் நொட்டிங்ஹொம் பொரஸ்ட் அணி 14 புள்ளி களுடன் 18 ஆவது இடத்திலும் உள்ளன. (4)

# இந்தியா-இலங்கை இருபது-20

இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கு இடையிலான முதலாவது இருபது-20 போட்டி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை தூண்டியுள்ளது.

மும்பை- வான்கடே மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணிக்கு தசுன் சானகவும் இந்திய அணிக்கு ரோஹித் சர்மாவும் தலைமை தாங்கவுள்ளனர்.

இரு அணிகளும் இது வரை 26 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் 17 முறை இந்தியா அணியும் 8 முறை இலங்கை அணியுமு் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டிக்கு முடிவு இல்லை.

மூன்று போட்டிகள் கொண்ட இருபது - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக, இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4)


## சேவைநலன் பாராட்டு



எமது பாடசாலையில் பௌதிகவியல் ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 03.01.2023 செவ்வாய்க்கிழமை முதல் ஓய்வுபெறும்

**திரு.கதிரேசு வேலாயுதநாதன்**
**(B.Sc, PGDE, M.Sc)**

அவர்களின் சேவையைப் பாராட்டி அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சேவை விபரம்**

- யா/மகாஜனக் கல்லூரி :- 01.09.1993 - 10.04.1996
- கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி :- 11.04.1996 - 30.09.1996
- மு/மல்லாவி மத்திய கல்லூரி :- 01.10.1996 - 21.02.1999
- வலயக்கல்வி அலுவலகம் துணுக்காய் (கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்) :- 22.02.1999 - 31.12.2010
- யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி :- 01.01.2011 - 07.01.2016
- யா/டிறிபேக் கல்லூரி :- 08.01.2016 - 22.04.2018
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி :- 23.04.2018 - 05.01.2020
- யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி :- 06.01.2020 - 02.01.2023

வாழ்த்துவோர்: - **பாடசாலை நலன்புரிக்கழகம், யா/ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்.**

(14112)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 814 7389, 077 241 7589**

(14111)



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தண்ணீரூற்று மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 04.12.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிவபதப்பேறடைந்த எமது குலவிளக்கு

**அமரர் சுகந்தினி சிவானந்தராசா**

அவர்களின் சிவபதப்பேறடைந்தமை குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 01.01.2023 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிரியைகள் 03.01.2023 இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் எம்முடன் பலவழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இன்றுவரை எமக்குப் பல உதவிகளையும் செய்து தந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தண்ணீரூற்று, முள்ளியவளை.**

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-5729)



## மரண அறிவித்தல்

### திருமதி நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை



**தோற்றம்** 08.03.1933 — **மறைவு** 29.12.2022

வரணியைப் பிறப்பிடமாகவும் 1132, திருநகர் தெற்கு, கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை அவர்கள் கடந்த 29.12.2022 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகநாதி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முன்னாள் பொது முகாமையாளரும் திருநகர் தெற்கு சனசமூக நிலையத் தலைவரும் திருநகர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க உப தலைவரும் திருநகர் தெற்கு உணவு விநியோக குழுவின் முகாமையாளருமான சிவபாலன், காலஞ்சென்ற இராசரெத்தினம், தேவிகாராணி (கிளிநொச்சி), செனியூட்சன் (USA) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கருணாவதி மற்றும் பூமணி (கொழும்பு), கிருஷ்ணமூர்த்தி, தவஈஸ்வரி (சுகந்தி - USA) ஆகியோரின் அன்பு மாமியாரும் பாரதி (யாழ்ப்பாணம்), ஜீவா (மருத்துவர் - தெல்லிப்பழை), கஜன் (விஜே - கொழும்பு), துஸ்யந்தன் (லண்டன்), ஸ்ரீபன், காலஞ்சென்ற ஸ்ரலின் மற்றும் ஸ்ரனிஸ் (கிளிநொச்சி), அக்ஷயன் (USA) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லவண்யா, அபினவ் (யாழ்ப்பாணம்), கியாஷினி, ஷர்விதன் (கொழும்பு), அதர்வா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2023) பிற்பகல் 2 மணியளவில் இல.1132, திருநகர் தெற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5731)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணிலை சந்தித்தார் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர்



(கொழும்பு)

தனிப்பட்ட விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் நேற்று திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்ட கெமரூன், ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (நி)

## கியூ.ஆர் குறியீட்டுடன் சாரதிப் பத்திரம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

கியூ.ஆர் குறியீடு கொண்ட சாரதி அனுமதி பத்திரத்தினை அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது கியூ.ஆர் குறியீட்டுடன் கூடிய உரிமமும் வழங்கப்படும் என அதன் ஆணையாளர் கோபி டி சில்வா தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வாகனப் பதிவுகள் கடந்த வருடம் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## 2000 கைதிகளை விடுவித்தால் 11 இலட்சம் குழந்தைகளுக்கு உணவளிக்கலாம்

### மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

2000 கைதிகள் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டால், அரசாங்கத்திற்கு வருடாந்தம் சுமார் 80 கோடி ரூபாவை சேமிக்க முடியும் என மருத்துவர்கள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள 11 இலட்சம் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த இந்தப் பணத்தைப் பயன்படுத்தலாம் என்றும் இதற்கு 66 கோடி ரூபாய் மட்டுமே செலவாகும் என்றும் அந்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தைப் பருவத்தில் சரியான ஊட்டச்சத்து கிடைக்காமல், குழந்தைகளின் உடல் வளர்ச்சி குறைவதோடு, பகுத்தறிவு நுண்ணறிவும் விமர்சன சிந்தனையும் குறைவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி)

# கொரோனா ஆபத்து நீங்கவில்லை தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்

## தொற்று நோயியல் பிரிவு கோரிக்கை

(கொழும்பு)

நான்காவது எதிர்ப்பு கொவிட்-19 தடுப்பூசியாக (இரண்டாவது பூஸ்டர் டோஸ்) சினோபார்ம் தடுப்பூசியை கூடிய விரைவில் பெறுமாறு தொற்று நோயியல் பிரிவு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. கொவிட்-19 இன் ஆபத்து இன்னும் நாட்டில் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உலகெங்கிலும் கொவிட்-19 பரவுவதை தொற்றுநோயியல் பிரிவு உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக தலைமை தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சமிதா கினிகே தெரிவித்தார்.

சமீப காலங்களில் பைசர் தடுப்பூசி நான்காவது டோஸாக வழங்கப்பட்டது. ஆனால் சுகாதார அமைச்சகம் அதன் காலாவதியான பிறகு தடுப்பூசியை அகற்றியது.

அதன்படி நான்காவது டோஸாக சினோபார்ம் தடுப்பூசி போட அதிகாரிகள் முடிவு செய்தனர்.

மக்கள் எந்தவொரு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்திற்கும் சென்று சினோபார்ம் தடுப்பூசியை எளிதாகப் பெறலாம். நாடு 26 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளது. மற்றும் இதுவரை 23, 321,962 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும் 2,678, 038சினோ பார்ம் தடுப் பூசிகள் நாட்டில் உள்ளன.

எனவே, கொவிட் டோஸ்களைப் பெறாத எந்தவொரு நபரும் சினோபார்ம் தடுப்பூசியைப் பெற முடியும் என்று மருத்துவர் கினிகே மேலும் தெரிவித்திருந்தார். (நி)

## மின்சார திருத்தத்திற்கு எதிராக நீதிமன்றம் செல்லும் சு.க

(கொழும்பு)

புதிய மின்சாரத் திருத்தத்திற்கு எதிராக சுதந்திரக் கட்சி நீதிமன்றம் செல்லத் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய புதிய மின்சாரக் கட்டண திருத்தத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (நி)

## கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

பரீட்சை திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

மத வழிபாடுகளைத் தொடர்ந்து இந்த நிகழ்வுகள், பத்தரமுல்ல பெலவத்தவிலுள்ள பரீட்சை திணைக்களத்தில் இடம்பெற்றது. பரீட்சை திணைக்களத்தின் முன்னாள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேனவின் ஓய்வு காரணமாக வெற்றிடமாக இருந்த பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார். (நி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 28/12/2022 அன்று கல்வியமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை இசை,நடனப் போட்டியில் யா/இணுவில் மத்திய கல்லூரி நாட்டிய நாடகம், புத்தாக்க நடனம், செம்பு நடனம், வயலின் இசை ஆகிய நிகழ்வுகளில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ்வரலாற்றுச் சாதனையைப் படைத்த மாணவச் செல்வங்களையும் இவ்வெற்றியைப் பெற்றுக்கொள்ள அயராது உழைத்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சீ-5728)

Best Wishes

பாடசாலைச் சமூகம், யா/இணுவில் மத்திய கல்லூரி.


# இராசிபலன்

| | | |
|---|---|---|
| 03.01.2023<br>மார்கழி 19, செவ்வாய்க்கிழமை<br>துவாதசி பின்னிரவு 12.14 மணிவரை | கார்த்திகை முன்னிரவு 6.53 மணிவரை<br>சுபநேரம் 11.00-12.30 மணிவரை<br>இராகுகாலம் 3.30-5.00 மணிவரை | சித்தாமிர்தம்<br>சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி |

வளவன்




காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் ஏற்படலாம்.




பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், உடல் நலம் சீராக உணவில் கட்டுப்பாடு தேவை.





கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




எடுத்த காரியங்களை முடிக்க ஒரு முறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நிலை ஏற்படலாம்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், வியாபார விரோதம் விலகும், போசன சுகமுண்டு.




பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், நண்பர்கள் வட்டம் விரிவடையும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடை செய்து விட முடியாது.

# நுளம்புக்கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு விசேட செயற்றிட்டம்

## யாழ்.சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)
ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் யாழ். மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தினை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகின்றன.

எனவே இதனை கருத்திற் கொண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் யாழ்.மாவட்டத்தில் விசேட நுளம்பு கட்டுப்பாட்டு செயற்றிட்டத்தினை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே உங்கள் வீட்டின் உட்பகுதிகளிலும் வெளிச் சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளனவா என்பதனை கிரமமாக பரிசோதனை செய்வதுடன் அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவும்.

மேலும் கைவிடப்பட்ட காணிகள், வீடுகள் என்பனவற்றின் உரிமையாளர்கள் அவற்றை



துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவ்வாறான இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்து நிலைகள், கள தரிசிப்புக்கு வருகை தரும் உத்தியோகத்தர்களால் அடையாளம் காணப்படுமாயின் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.(4-6-33)

# வன்னேரிக்குளம்-பாலாவி வீதியினை புனரமையுங்கள்

## பூநகரி பிரதேச சபை தவிசாளர்

(அக்கராயன்)
கிளிநொச்சி வன்னேரிக் குளம் தொடக்கம் பாலாவி வரையான வீதியினை தொடர்ந்து புனரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

வன்னேரிக்குளத்தில் இருந்து பாலாவி வரையான வீதி புனரமைப்புகள் தொடங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இவ் வேலைகள் முன்னெடுக்கப்பட்டன.

இடைநிறுத்தப்பட்ட வீதி வேலையினை முன்னெடுக்குமாறு பல்லவராயன்கட்டு சந்தியில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய நிலையில் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் வீதி வேலைகள் தொடங்கப்படும் என அதிகாரிகளினால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

வேரவில் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் வண்டி புனரமைக்கப்படாத வீதியினால் முழங்காவில் ஆதார மருத்துவமனை, கிளிநொச்சி பொது மருத்துவமனை என்பவற்றிற்கு அவசரமாகச் செல்ல முடியாது உள்ளது. இந்நிலையில் கிளிநொச்சி மேற்கிற்கான போக்குவரத்து வன்னேரிக் குளத்தில் இருந்து பாலாவி வரை சீர்குலைந்து உள்ளது.

குண்டும் குழியுமான வீதியினால் பூநகரி கடல் உணவு கிளிநொச்சிசந்தைக்குக் கொண்டு செல்வதில் நெருக்கடிகள் காணப்படுகின்றன. இந்நிலையில் குறித்த வீதியினைப் புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகம், பூநகரி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என தெரிவித்தார். (4-6-350)



யாழ்ப்பாண நீரிழிவு கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கோண்டாவில் ராஜேஸ்வரி அறக்கட்டளை நிலையத்தினரால் நேற்று ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான இன்சுலின் மருந்துப் பொருட்கள் யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளரிடம் கையளிக் கப்பட்டன.

(படம்:-சிவசாந்தன்)

# வலி.வடக்கு மீள்குடியேற்றம், புனர்வாழ்வுச்சங்கத் தலைவர்

## குணபாலசிங்கம் காலமானார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் தனது 77 ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை காலமானார்.

வலி.வடக்கில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்து கடந்த 32 வருட காலங்களுக்கு மேல் வசித்து வரும் நிலையில் தனது கடைசிக் காலம் வரையிலும் அந்த மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும் என கோரிக்கையை முன்வைத்து போராடி வந்தவராவார்

மயிலிட்டியைச் சேர்ந்த 700 மீனவ குடும்பங்களும் பலாலியைச் சேர்ந்த 2000 ஆம் குடும்பங்களும் மீள்குடியேற்றத்திற்காக காத்திருக்கின்றன எனவும் நாங்கள் உயிர் பிழைப்பதற்காக இந்த நிலங்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்



என போராடி வந்த குணபாலசிங்கம், ஜனாதிபதியை சந்தித்து எங்கள் துயரங்களை முன்வைப்பதற்காக வாய்ப்பை வழங்க வேண்டும் என கடந்த ஒக்டோபர் மாதம் கோரிக்கையை முன் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# 12 இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை

(கரணவாய்)
வட பகுதி கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் நிபந்தனையுடன் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி வடபகுதி கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு மீண்டும் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீரியல்வளத் திணைக்களத்தினரால் மூன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா ஒரு வருட சிறைத் தண்டனைப்படி மூன்று குற்றச்சாட்டுக்கும் மூன்று வருட சிறைத் தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்தி வைத்து தீர்ப்பளித்ததுடன் படகை பறிமுதல் செய்வதாகவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார். (4-60)

# விவசாய பயிற்சிப் பட்டறை

(கருமபுரம்)
யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 5 ஆம் திகதி விவசாய பீட கேட்போர் கூடத்தில் இயற்கை விவசாயம் தொடர்பான ஒரு நாள் பயிற்சிப்பட்டறை இந்தியாவிலிருந்து வரும் இயற்கை விவசாயம் தொடர்பான விஞ்ஞானிகளால் நடத்தப்படவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி சீ.வசந்தரூபா தெரிவித்துள்ளார். (4-6-316)

# மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் படுகாயம்

(பொற்பதி)
வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி அந்தோனியார் கோயில் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரையும் அவ்விடத்தில் நின்ற மக்கள் உடனடியாக மருதங்கேணி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மந்திகை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது.

பின்னர் காயமடைந்த இரு வரும் மந்திகையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங் கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-64)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மறவன்புலோ கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு ஆகியன எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

குறித்த தினத்தில் முற்பகல் 10 மணிக்கு மறவன்புலோ ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுக்கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவு ஆகியன இடம்பெற இருப்பதால் கிராம மக்களை பங்குபற்றுமாறு கேட்டுள்ளனர். (4-6-30)

# நினைவு நாள்

(கரணவாய்)
இலக்கண இலக்கிய பேராசான் பண்டிதர் க.வீரகத்தியின் நூற்றாண்டு நிறைவு நினைவு நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கரவெட்டி சாமியன் அரசடி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் சி.பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வட்டுக் கோட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

(படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2023 - 31.12.2023

## மாற்றங்களும் ஏற்றங்களும் உருவாகும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**சனிப் பெயர்ச்சிக்கு பிறகு சந்தோசங்கள் அதிகரிக்கும் ரிஷப இராசி வாசகர்களே!**

நீங்கள் எதிர்பார்த்து காத்திருந்த புத்தாண்டு வந்துவிட்டது. உங்கள் எண்ணங்கள் ஈடேறும் விதத்திலேயே கிரகங்கள் சஞ்சரிக்கப் போகின்றன. சனி, குரு, ராகு-கேது ஆகியவை பெயர்ச்சியாவதன் மூலம், முதல் தரமான வாழ்க்கை அமையப்போகிறது. உங்கள் இராசிநாதன் சுக்கிரன், தர்ம - கர்மாதி பதியாக விளங்கும் சனியோடு இணைந்து பாக்கிய ஸ்தானத்தில் பலம்பெற்று சஞ்சரித்தபடி ஆண்டு தொடங்குகிறது. எனவே முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப் பீர்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பொன்னான வாழ்க்கை மலர, புத்தாண்டின் கிரக நிலைகளில் மாற்றம் வரும் போதெல்லாம் ஏற்றம் தரும் தெய்வத்தை வழிபட்டு வாருங்கள்.

### புத்தாண்டு கிரக நிலை

புத்தாண்டு தொடக்கத்தில் ஜென்ம இராசியில் விரயாதிபதி செவ்வாய் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன், பாக்கிய ஸ்தானத்தில் சனியோடு இணைந்திருக்கிறார். அஷ்டமத்தில் சூரியனும் புதனும் சேர்ந்திருக்கின்றனர். இலாப ஸ்தானத்தில், இலாபாதிபதி குருபலம் பெற்று சொந்த வீட்டில் இருக்கிறார். 12 இல் ராகுவும் 6 இல் கேதுவும் உள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் புத்தாண்டு தொடங்குகிறது. ஆண்டு தொடக்கத்தில் குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்கள் புனிதமடைகின்றன. உங்கள் இராசிக்கு அதிபதியாக விளங்கும் சுக்கிரனுக்கு, குரு பகவான் பகைக் கிரகமாக விளங்கினாலும், "குரு பார்க்க கோடி நன்மை" என்பதால் அது பார்க்கும் இடங்கள் எல்லாம் நன்மையாகவே நடைபெறும். முயற்சியில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக அமையும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். நிரந்தர வருமானத்திற்கு வழிபிறக்கும். இல்வாழ்க்கை இனியதாக அமையும். தம்பதியர்களுக்குள் இணக்கம் ஏற்படும். தனித்தனி ஊர்களில் பணிபுரிந்த தம்பதியர் இனி ஒரே ஊரில் பணிபுரிய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

### கும்ப - சனி சஞ்சாரம்

29.3.2023 அன்று சனிபகவான், அவிட்டம் 3 ஆம் பாதத்தில் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிச் செல்கிறார். 24.8.2023 அன்று மகரத்திற்கு வக்கிர இயக்கத்தில் வரும் அவர், 20.12.2023 அன்று மீண்டும் கும்ப இராசிக்குச் செல்கிறார். இடையில் வக்கிர இயக்கத்தில் கும்ப இராசியிலும் மகர இராசியிலும் சனி சஞ்சரிக்கும் பொழுது மாற்றங்களும் ஏற்றங்களும் உருவாகும். தொழில் மற்றும் பாக்கிய ஸ்தான த்திற்கு அதிபதியான சனி, வக்கிர காலத்தில் தொழில் மாற்றங்களை உருவாக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்ற மும் இடமாற்றமும் எதிர்பாராத வித த்தில் வரலாம். உங்கள் இராசிக்கு யோகாதிபதியாக சனி விளங்குவதால், எதற்கும் பயப்படத் தேவையில்லை. மாறுதல்கள் வந்தாலும் அது மனதிற்கினிய விதத்திலேயே அமையும்.

### மேஷ - குரு சஞ்சாரம்

22.4.2023 அன்று குரு பகவான், அசுவதி நட்சத்திரம் முதல் பாதத்தில், மேஷ இராசியில் சஞ்ச ரிக்கப் போகிறார். அவரது பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகிறது. குருவின் பார்வை பலத்தால் அந்த இடங்கள் புனிதமடைகின்றன. 4 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். வீடு, வாகனம் வாங்குவதில் இருந்த தடை அகலும். 6 ஆம் இடத்தில் குரு பார்வை. பதிவதால் நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். புதிய வாய்ப்புகள் வந்து அலைமோதும். தற்காலிகப் பணியில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு பணி நிரந்தரமாகும். "வாங்கிய கடனைக் கொடுக்க முடிய வில்லையே, கொடுத்த கடனை வாங்க முடியவில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது நல்ல நேரம் தொடங்கப் போகிறது. கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம். இலாபம் எதிர்பார்த்தபடியே வந்துசேரும். குருவின் பார்வை 8 ஆம் இடத்தில் பதிவதால் ஆயுள் ஸ்தானம் பலப்படுகிறது. ஆரோக்கியத் தொல்லை அகன்று மருத்துவச் செலவு குறையும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு. சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். பொதுவாழ்வில் ஏற்பட்ட வீண்பழிகள் அகலும். வியாபாரத்தில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். வாடகைக் கட்டடத்தில் நடைபெறும் தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு.

### இராகு-கேது பெயர்ச்சி

8.10.2023 அன்று ரேவதி நட்ச




த்திரம் 4 ஆம் பாதம் மீன இராசியில் இராகுவும் சித்திரை நட்சத்திரம் 2 ஆம் பாதம் கன்னி இராசியில் கேது வும் பெயர்ச்சியாகிறார்கள். 11 ஆம் இடமான இலாப ஸ்தானத்தில் இராகுவும் 5 ஆம் இடமான பூர்வ புண் ணிய ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போவதால் சுமார் 1½ ஆண்டு காலம் அவர்களுக்குரிய ஆதிபத்ய பலன்களை வழங்குவர். இலாப ஸ்தானத்திற்கு வரும் ராகு, பணத்தேவையைப் பூர்த்தி செய்வார். சரிந்த பொருளாதாரம் உயரும். தொழிலை விரிவுபடுத்தும் முயற்சிக்கு கடன் உதவி கிடைக்கும். "படித்து முடித்தும் வேலையில்லையே" என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப் பொழுது வேலைவாய்ப்பு அமையும். 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், இல்லத்தில் பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறும். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த மனச் சங்கடங்கள் மாறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். "பூர்வீகச் சொத்துக்களை வைத்துக் கொள்ளலாமா? அல்லது அதை விற்று விட்டுப் புதிய சொத்துக்கள் வாங்கலாமா?" என்று யோசிப்பீர்கள். ஆலயத் திருப்பணிகளுக்கு கொடுத்து உதவுவீர்கள்.

### செவ்வாய் - சனி பார்வை

இந்தப் புத்தாண்டில் 4 முறை செவ்வாய் - சனி பார்வை ஏற்படுகிறது. இக்காலகட்டத்தில் பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். தொழில் குறுக்கீடுகள் ஏற்படும். அனைத்து காரியங்களிலும் அதிக கவனம் தேவை. தொழில் கூட்டாளிகளால் தொல்லைகள் வந்து சேரும். பிறருக்கு பொறுப்பு சொல்வதால் பிரச்சினைகள் உருவாகலாம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. சொந்தங்களாலும் சொத்துக்களாலும் மனக்குழப்பம் ஏற்படும். இக்காலத்தில் வழிபாடுகளும் ஆன்மிகப் பெரியவர்களின் வழிகாட்டுதலுமே கைகொடுக்கும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

பிரதோஷ காலத்தில் சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். யோக பலம் பெற்ற நாளில் நந்தீஸ்வரரை வழிபட்டால் நினைத்தது நிறைவேறும். சனி மற்றும் குரு வக்கிர காலம் 27.6.2023 முதல் 23.8.2023 வரை கும்ப இராசியில் சனி வக்கிரம் பெறுகிறார். 24.8. 2023 முதல் 23.10.2023 வரை மகரத்தில் வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. தொழிலில் விழிப்புணர்ச்சி தேவை. தொல்லை தரும் எதிரிகளின் பலம் கூடும். உறவினர் களின் பகையால் உள்ளம் வாட நேரிடும். உயரதிகாரிகளிடம் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம். சுயதொழில் செய்யும் சிந்தனை அதிகரிக்கும். 12.9.2023 முதல் 19.12.2023 வரை மேஷ இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு, உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமாக உள்ளதால், அவரது வக்கிர காலம் உங்களுக்கு வளர்ச்சியான காலமாகவே இருக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு உண்டு. இழப்புக்களை ஈடுகட்ட எடுத்த புது முயற்சி வெற்றி தரும். உழைப்பிற்கேற்ற பலன் உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். வெளிநாட்டு முயற்சியும் அனுகூலமாகும். இது போன்ற வக்கிர காலங்களில், சுய ஜாதக அடிப்படையில் பாக்கிய ஸ்தானத்தின் பலமறிந்து பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இப்புத்தாண்டு பொருளாதார த்தில் நிறைவை ஏற்படுத்தும். கண வன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். உடனிருப்பவர், உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர். புகுந்த வீட்டில் மதிப்பும் மரியாதையும் உயரும். சனிப் பெயர்ச்சிக்குப் பிறகு, உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். குருப் பெயர்ச்சியின் விளைவாக சுபவிரயங்கள் ஏற்படும். இராகு- கேது பெயர்ச்சிக்குப் பிறகு சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. ப்ணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து ஆதரவோடு, நல்ல காரியங்கள் பலவும் இல்லத்தில் நடைபெறும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 66





"வாணர் குலத்தின் கொடைத் தன்மை இன்னமும் போகவில்லை!" என்று சொல்லிக் கொண்டு ஜோதிடர் பொன்னை எடுத்து கொண்டார்.

## பதினான்காம் அத்தியாயம் ஆற்றங்கரை முதலை

குடந்தை நகரிலிருந்து தஞ்சாவூர் செல்வோர் அந்தக் காலத்தில் அரிசலாற்றங் கரையோடாவது காவேரிக் கரையின் மேலாவது சென்று, திருவையாற்றை அடைவார்கள். அங்கிருந்து தெற்கே திரும்பித் தஞ்சாவூர் போவார்கள். வழியிலுள்ள குடமுருட்டி, வெட்டாறு, வெண்ணாறு, வடவாறு நதிகளைத் தாண்ட அங்கே தான் வசதியான துறைகள் இருந்தன.

குடந்தையிலிருந்து புறப்பட்ட வல்லவரையன், முதலில் அரிசிலாற்றங்கரையை நோக்கிச் சென்றான். வழியில் அவன் பார்த்த காட்சிகள் எல்லாம் சோழ நாட்டைக் குறித்து அவன் கேள்விப்பட்டிருந்ததைக் காட்டிலும் அதிகமாகவே அவனைப் பிரமிக்கச் செய்தன.

எந்த இனிய காட்சியையும் முதல் முறை பார்க்கும் போது அதன் இனிமை மிகுந்து தோன்றுமல்லவா? பசும்பயிர் வயல்களும், இஞ்சி, மஞ்சள் கொல்லைகளும் கரும்பு, வாழைத் தோட்டங்களும் தென்னை, கமுகுத் தோப்புகளும் வாவிகளும் ஓடைகளும் குளங்களும் வாய்க்கால்களும் மாறிமாறி வந்து கொண்டேயிருந்தன.

ஓடைகளில் அல்லியும் குவளையும் காடாகப் பூத்துக் கிடந்தன. குளங்களில் செந்தாமரையும் வெண்தாமரையும் நீலோத்பவமும் செங்கழுநீரும் கண்கொள்ளாக் காட்சியளித்தன.

வெண்ணிறக் கொக்குகள் மந்தை மந்தையாகப் பறந்தன. செங்கால் நாரைகள் ஒற்றைக்காலில் நின்று தவம் செய்தன. மடைகளின் வழியாகத் தண்ணீர் குபுகுபு என்று பாய்ந்தது. நல்ல உரமும் தழை எருவும் போட்டுப் போட்டுக் கன்னங்கரேலென்றிருந்த கழனிகளின் சேற்றை உழவர்கள் மேலும் ஆழமாக உழுது பண்படுத்தினார்கள்.

பண்பட்ட வயல்களில் பெண்கள் நடவு நட்டார்கள். நடவு செய்து கொண்டே, இனிய கிராமிய பாடல்களைப் பாடினார்கள். கரும்புத் தோட்டங்களின் பக்கத்தில் கரும்பு ஆலைகள் அமைத்திருந்தார்கள்.

சென்ற ஆண்டில் பயிரிட்ட முற்றிய கருப்பங் கழிகளை வெட்டி அந்தக் கரும்பு ஆலைகளில் கொடுத்துச் சாறு பிழிந்தார்கள். கரும்புச் சாற்றின் மணமும் வெல்லம் காய்ச்சும் மணமும் சேர்ந்து கலந்து வந்து மூக்கைத் துளைத்தன...

தென்னந் தோப்புகளின் மத்தியில் கீற்று ஓலைகள் வேயப்பட்ட குடிசைகளும் ஓட்டு வீடுகளும் இருந்தன. கிராமங்களில் வீட்டு வாசலைச் சுத்தமாக மெழுகி, பெருக்கித் தரையைக் கண்ணாடி போல் வைத்திருந்தார்கள்.

சில வீடுகளின் வாசல்களில் நெல் உலரப் போட்டிருந்தார்கள். அந்த நெல்லைக் கோழிகள் வந்து கொத்தித் தின்றுவிட்டு, "கொக்கரக்கோ!" என்று கத்திக் கொண்டு திரும்பிப் போயின. நெல்லைக் காவல் காத்துக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் அக்கோழிகளை விரட்டி அடிக்கவில்லை.

"கோழி அப்படி எவ்வளவு நெல்லைத் தின்றுவிடப் போகிறது?" என்று அலட்சியத்துடன் அக்குழந்தைகள் சோழியும் பல்லாங்குழியும் ஆடிக் கொண்டிருந்தார்கள். குடிசைகளின் கூரைகளின் வழியாக அடுப்புப் புகை மேலே வந்து கொண்டிருந்தது. அடுப்புப் புகையுடன் நெல்லைப் புழுக்கும் மணமும் கம்பு வறுக்கும் மணமும் இறைச்சி வதக்கும் நாற்றமும் கலந்து வந்தன.

அக்காலத்தில் போர் வீரர்கள் பெரும்பாலும் மாமிச பட்சணிகளாகவே இருந்தார்கள். வல்லவரையனும் அப்படித்தான்; எனவே அந்த மணங்கள் அவனுடைய நாவில் ஜலம் ஊறச் செய்தன. ஆங்காங்கே சாலை ஓரத்தில் கொல்லர் உலைக் களங்கள் இருந்தன. உலைகளில்

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### குருவுக்கு குதிரை

சிஷ்யர்களோடு குருநாதர் தம் மடத்துக்குச் சென்று சேர்ந்தார். எல்லோருக்கும் மிகவும் சோர்வாக இருந்தது. உடல் சோர்வைவிட உள்ளத்தின் சோர்வே மேலாக இருந்தது. எப்படியோ வந்த ஆபத்திலிருந்து மீண்டோமே என்ற மகிழ்ச்சி ஒரு பக்கமும். அநியாயமாக ஒரு சிஷ்யனைப் பலி கொடுக்க இருந்தோமே என்ற வேதனை ஒரு பக்கமும்...

மொத்தத்தில் அவர்கள் நெஞ்சிலே நிம்மதி கொஞ்சமும் இல்லாமல் போய் விட்டது.

'தங்களுக்கு ஏன் இந்த தவிப்பும் வாட்டமும், தங்கள் குருநாதருக்கு மட்டும் ஒரு குதிரையிருந்து விட்டால் அந்தக் குதிரை வீரனைப்போல ஆபத்தின்றி ஆற்றைக் கடந்திருக்கலாமே என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்தவர்கள் நிச்சயமாக விரைவில் குருவுக்கு ஒரு குதிரை வாங்கியாக வேண்டும் என்று ஒரு திடமான முடிவுக்கு வந்து விட்டார்கள்.

அவர்கள் வரும் வழியில் தங்களுக்கு அந்த நதியினால் ஏற்பட்ட கதியைக் கதைகதையாக அளந்து அங்கலாய்த்துக் கொண்டிருந்த போது அதை ஒரு கிழவி கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்தக் கிழவிதான் அவர்களுடைய மடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்வாள். அவளுக்குக் கண் பார்வை சரியாகத் தெரியாது. ஏறக்குறைய குருடு என்றே சொல்ல வேண்டும்.

அந்தக் குருட்டுக் கிழவி, குடைந்து குடைந்து நடந்த விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். விடயம் விளக்கமாகத் தெரிந்த பிறகு அவள் விலாநோகச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய் கிழவி!" என்று கேட்டார் பரமார்த்த குரு.



"சிரிக்காமல் என்ன செய்வது? நீங்கள் ஆற்றைக் கடந்து கரைக்கு வந்ததும் ஆளை எண்ணிப் பார்க்கிற போது, உங்களையும் சேர்த்து எண்ணிக் கொள்ளத் தவறிவிட்டீர்கள்.

ஒருவர் கூடத் தன்னையும் கணக்கில் சேர்த்து எண்ணிக் கொள்ளவே இல்லையே!" என்று மேலும் சிரித்தாள் கிழவி. "அட, ஆமா!" என்று அசடு வழிந்தார் குரு.

"அடடா, ஆமாம் ஆமாம்!" என்று மொத்தமாகச் சேர்ந்து தங்கள் முட்டாள்தனத்தை ஒப்புக் கொண்டார்கள் சிஷ்யர்கள்.

"அநியாயத்துக்கு ஒவ்வொருவரும் முதுகிலே தடியால் அடி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறீர்களே. உங்கள் யோசனை இல்லாத்தனத்துக்கு விலையாக நாற்பத்தைந்து பணம் வேறு கொட்டி அழுது விட்டு வந்திருக்கிறீர்களே!" என்று சிரிப்பாய் சிரித்தாள் கிழவி.

"எங்களில் ஒருவருக்குக் கூட அப்படி ஒரு யோசனை தோன்றவே இல்லையே!" என்று அதிசயத்துக் கொண்டார்கள் அனைவரும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மெல்ல மெல்ல இழந்து போகும் மார்கழி நீராடல் பண்பாடு

மார்கழி மாதம் புனிதமான காலம். பொதுவில் மார்கழி மாதத்தை சிவனுக்குரிய காலமாக நம்மவர்கள் வகுத்துக் கொண்டனர்.

அதிலும் குளிர்நிறைந்த இக்காலத்தில் வைகறைத் துயில் எழுந்து நீராடி, சந்தியா வந்தனம் செய்து திருப்பள்ளி எழுச்சி பாடுகின்ற நீண்ட நெடும் பண்பாடு எங்கள் மண்ணுக்குரியது.

தவிர, மார்கழி மாதம் என்றால் அது மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்துக்குரிய காலமாகவும் எங்கள் வழிபாட்டுப் பண்பாடு அமைகிறது.

பெரியவர்கள், இளையவர்கள், சிறுவர்கள் என எல்லோரும் அதிகாலையில் எழுந்து மார்கழி நீராடி, சங்கு சேமக்கலம் ஆய இசைக் கலசங்களுடன் திருப்பள்ளி எழுச்சி பாடியவாறு வீதியில் செல்வர்.

வீதிகள் தோறும் திருப்பள்ளி எழுச்சி பாடிச் செல்கின்ற அடியார் கூட்டத்துடன் இல்லங்கள் தோறும் காத்து நிற்பவர்கள் பஜனைக் குழுவுடன் சேர்ந்து திருப்பள்ளி எழுச்சி பாடி சங்கு சேமக்கலம் இசைத்து தத்தம் வழிபடு ஆலயத்தைச் சென்றடைவர்.

அங்கு திருவெம்பாவை பாடப்பட்டு சிவ வழிபாடு இடம்பெறும்.

திருவெம்பாக் காலமென்றால் இதுவே நடைமுறை. இந்த நடைமுறை ஊர்தோறும் நடந்தது. காலம் காலமாக முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு மார்கழித் திங்களில் குளிர் நிறைந்த காலத்தில் நீராடி, திருப்பள்ளி எழுச்சி பாடியவாறு ஊர் யாத்திரை செய்வதன் மூலம் எங்களிடையே ஒற்றுமையும் இளம் பிள்ளைகளிடம் ஆன்மிக நாட்டமும் உடல் ஆரோக்கியமும் நம் புறச்சூழலில் தெய்வீக நிறைவும் ஏற்பட்டன.

ஆனால் இன்று திருப்பள்ளி எழுச்சி பாடிய வண்ணம் வீதிதோறும் நடந்து செல்லும் பண்பாடு இல்லாது போயிற்று.

எங்கேனும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இடங்களில் மட்டுமே அந்த நடைமுறை அமுலில் உள்ளது.

மற்றும்படி திருப்பள்ளி எழுச்சி பாடுவதற்கும் அதை மனனம் செய்வதற்கும் குளிர் நிறைந்த மார்கழி மாதத்து வைகறையில் துயில் எழுவதற்கும் ஆளில்லை. அவற்றை ஊக்குவிப்பதற்கு ஆலயங்களும் தயாரில்லை.

என்ன செய்வது பகல் முழுவதும் பாடசாலைப் படிப்பு. பின்பு தனியார் கல்வி நிறுவனம் செல்லும் வழக்கம். இரவு முழுவதும் தொடர் நாடகமும் முகநூல் மோகமும் என்பதாக நிலைமை இருக்க, இயல், இசை, நாடகம், கூட்டுப் பிரார்த்தனை, ஆலய வழிபடு சிரமதானம், விளையாட்டு நிகழ்வு என அனைத்தும் இல்லாமல் போய், எங்கள் மனித ஆற்றல் வரையறுக்கப்பட்டுக் கிடக்கிறது.

இதன்விளைவாக போதையும் மதுப்பழக்கமும் முதிர் வயதிலும் விரசம் கொண்ட மன நிலையும் மலிந்து போயிற்று.

எனவே இந்து கலாசார திணைக்களம் மற்றும் ஆலய நிர்வாகங்கள் மார்கழி நீராடல் பண்பாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதனைச் செய்வதன் மூலம் ஆன்மிக நாட்டத்தை மக்கள் சமூகத்தில் ஏற்படுத்த எல்லாம்; நல்லதாய், திருத்தமாய், உன்னதமாய் அமையும். இது சத்தியம்.

# அலுவலக நேரங்களில் சமூக வலைத்தள பயன்பாட்டை குறைத்து சேவைகளை முன்னெடுக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

அலுவலக நேரத்தில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் போது அரச ஊழியர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு பொது நிர்வாக அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் அலுவலகங்களில்பேஸ்புக், வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இருப்பதை அவதானிக்க முடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களின் பயன்பாட்டை குறைத்து, அலுவலக நேரங்களில் மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## முதல்வர் கிண்ண சதுரங்க போட்டி பிற்போடப்பட்டது

யாழ். மாநகர சபையினால் எதிர்வரும் 6 மற்றும் 14 ஆம் திகதிகளில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்த முதல்வர் கிண்ணச் சதுரங்கச் சுற்றுப் போட்டியானது தற்போது சபை நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினைக் கருத்திற் கொண்டு மறு அறிவித்தல் வரை தற்காலிகமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

போட்டிகள் நடத்தப்படும் திகதிகள் தொடர்பில் வெகுவிரைவில் போட்டியாளர்களுக்கு அறியத் தரப்படும் என மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (4-6)

## வடமராட்சியில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணி சந்தியில் மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம் அடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆழியவளையைச் சேர்ந்த யோகச்சந்திரன் பிரகலாதன் (வயது -42) என்ற இளம்குடும்பத்தரே படுகாயம் அடைந்தவராவார். தலையில் பலத்த காயம் ஏற்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

(ம-7,60)

## அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுக்க கோட்டா விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுப்பதற்கு விண்ணப்பித்துள்ளார்.

முன்னதாக 2019 ஆம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக கோட்டாபய ராஜபக்ஷ தமது அமெரிக்க குடியுரிமையை துறந்தார்.

இந்தநிலையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர் என்று கூறப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களின் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டில் இருந்து வெளியேறிய போது, எந்த நாடும் அவருக்கு புகலிடம் வழங்கவில்லை.

இதனையடுத்தே தனது அமெரிக்க குடியுரிமையை மீட்டெடுப்பதற்கு கோட்டாபய ராஜபக்ஷ விண்ணப்பித்துள்ளதாக தி ஹிந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஆண்டு ஜூலை மாதம் இலங்கையிலிருந்து தப்பிச் சென்று இரண்டு மாதங்களுக்குப் பிறகு நாடு திரும்பினார்.

இந்தநிலையில் மீண்டும் அமெரிக்க குடியுரிமைக்கான கோரிக்கையை அமெரிக்க அரசாங்கம் இன்னும் பரிசீலிக்கவில்லை என்று இலங்கையின் செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

(ம-7)

## வல்வெட்டித்துறையில் தஞ்சம் அடைந்த 4 இந்திய மீனவர்களுக்கும் மறியல்

வல்வெட்டித்துறையில் தஞ்சம் அடைந்த நான்கு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நான்கு இந்திய மீனவர்கள் கடந்த 28 ஆம் திகதி நள்ளிரவு இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது படகின் இயந்திர கோளாறு காரணமாக வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் உள்ள கடற்கரையில் தஞ்சமடைந்தனர்.

தஞ்சமடைந்துள்ள இந்திய மீனவர்களை வல்வெட்டித்துறை பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைக்கு அனுமதி கோரியதை அடுத்து நான்கு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7,33,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** சீனோர்-படகு துறை (காரை நகர்), கடற்படை தளம்-காரை நகர், காரைநகர் கடற் படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி ,பாலக்காடு, தோப்புக்காடு, ஊரி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், குழுமாட்டு சந்தி, மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** கொண்டச்சி நீர் வழங்கல் சபை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## யாழிலிருந்து கடத்தப்பட்ட 5 கிலோ கஞ்சா மீட்பு
### ஒருவர் கைது

யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தப்பட்டு வீடொன்றின் பின்னால் புதைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளை பிரதேசத்தில் சில காலமாக பாரிய போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தம்புள்ளை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக பொலிஸ் விசேட பணியக குழுவிற்கு தகவல் கிடைத்ததையடுத்து, தம்புள்ளை தலைமையக பொலிஸ் பரிசோதகர் எஸ்.கே. அல்லெபொல தலைமையில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால்
# கிளிநொச்சி விவசாயிகளுக்கு 263 மில்.ரூபாய் நிதியுதவி

(கண்டாவளை)

ஆசிய வங்கியால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு 263 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக விவசாயிகளை தெளிவூட்டும் ஊடக சந்திப்பு ஒன்று கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை பெரும்போகத்தில் 19772 விவசாயிகள் 28778 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒரு ஹெக்டேயருக்கு குறைவான விவசாயிகளுக்கு 10000 ரூபாவும் இரண்டு ஹெக்டேயருக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு 20000 ரூபாய் வீதம் அவர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் கட்டம் கட்டமாக வைப்பில் இடப்படவுள்ளது. அத்துடன் உலக உணவு விவசாய தாபனத்தின் ஏற்பாட்டில் (FAO) USAIDயினால் TSP எனப்படும் அடிக்கட்டுப் பசளையும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-315-316)



வலிகாமம் வடக்குப் பிரதேச சபை சுகாதார தொழிலாளர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட இரத்ததான முகாம் கடந்த வெள்ளிக்கிழமை வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் நடைபெற்றது.

### வவுனியா நகர்ப் பகுதியில்
# கட்சித் தலைவர்களுக்கு சிலை; கட்டுமானப் பணிகள் ஆரம்பம்



(நெளுக்குளம்)

வவுனியா நகர மத்தியில் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகாமையில் இரண்டு கட்சி தலைவர்களுக்கு சிலை வைப்பதற்கான கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றது.

இரவோடு இரவாக அமைக்கப்பட்ட குறித்த கட்டுமானப் பணி தொடர்பில் வவுனியா நகரசபை தலைவரிடம் கேட்ட போது, ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் பத்மநாபா மற்றும் புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரனுக்கு சிலை வைப்பதற்காக குறித்த இடத்தில் கட்டுமானமொன்று அமைக்கப்படுவதாக தெரிவித்ததுடன் அதற்கான அனுமதி வட மாகாண ஆளுநரிடம் பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தந்தை செல்வாவின் சிலை அனுமதி பெறப்பட்டா கட்டப்பட்டது என்ற கேள்வியையும் எழுப்பியிருந்தார். இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கேட்ட போது, பத்மநாபாவின் சிலை குறித்த இடத்தில் வைக்கப்படவுள்ளது எனத் தெரிவித்ததுடன் அதற்கான நகரசபை அனுமதி 5 மாதங்களுக்கு முன்பே பெறப்பட்டதாகவும் வட மாகாண ஆளுநர் உள்ளூராட்சி மன்ற அனுமதி மாத்திரம் போதுமானது என தெரிவித்ததாகவும் கூறினார். எனினும் இவ் விடயம் தொடர்பாக பல நகர சபை உறுப்பினர்களுக்கு இவ் விடயம் தெரியாது எனவும் கூறியுள்ளனர். (4-6-299)

# பாடசாலையில் திருட முற்பட்டவர் மடக்கிப்பிடிப்பு

(தருமபுரம்)

பளை முகாவில் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் இரவு பாடசாலையில் உள்ள அறைகளை உடைத்து பொருட்களை திருடி கொண்டு செல்ல முற்பட்ட வேளை முகாவில் பிரதேச இளைஞர்கள் இணைந்து குறித்த இளைஞனை மடக்கி பிடித்து பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-316)


# நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் 32 ஆவது பொதுச்சபைக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் தலைவர் எஸ். யுவேந்திரா தலைமையில் இடம்பெற்றது.

இப் பொதுச்சபைக் கூட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைக்கு தலைவராக எஸ்.சிவாநந்தனும் உப தலைவராக திருமதி.பி.சாரதாவும் செயலாளராக வி.ஜி.தங்கவேலுவும் உப செயலாளராக ஆர்.எஸ்.திலீபனும் பொருளாளராக பி.ஜமுனாதேவியும் பத்திராதிபராக வி.ஸ்ரீ சக்திவேலும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களாக எஸ். யுவேந்திரா, தே.தேவானந்த், எ.றஞ்சித் சைலேந்திரகுமார், சுகிர்தா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (4)





2023 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

(படங்கள்: கஜிந்தன்-சிவசாந்தன்)



திருகோணமலையில் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுப் படுகொலை ஐந்து தமிழ் மாண வர்களின் 17 ஆம் ஆண்டு நினை வேந்தல் நேற்று திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 600 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 380 | 400 | 350 | 400 |
| தக்காளி | 220 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 120 | 140 | 200 | 150 |
| கரட் | 200 | 250 | 400 | 400 |
| பூசணி | 200 | 160 | 160 | 240 |
| புடோல் | 300 | 220 | 200 | 300 |
| வாழைக்காய் | 180 | 140 | 160 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 700 | 800 | 800 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 200 | 250 |
| பாகற்காய் | 800 | 500 | 600 | 600 |
| வெண்டக்காய் | 250 | 280 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 140 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 600 | 600 |
| லீக்ஸ் | 450 | 380 | 450 | 500 |
| பீற்றூட் | 400 | 450 | 450 | 500 |
| கறிமிளகாய் | 800 | 700 | 800 | 800 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 650 | 550 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 500 | — | 450 |
| கீரை – 1 பிடி | 120 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 150 | 120 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 80-90 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 360 | — | 350 |
| வெங்காயப்பூ | 650 | 800 | — | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | — | 160 |

# நிரந்தர வீடுகள் இல்லாது அந்தரிக்கும் இரணைதீவு மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி இரணைதீவில் வாழ்கின்ற குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள், மலசலகூடங்கள் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரணைதீவில் இருந்து போர்க் காலத்தில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் திரும்பிச் சென்று வாழவும் தொழில் முயற்சியில் ஈடுபடவும் அரசினால் அனுமதிக்கப்படாத நிலையில் இரணைதீவினை பூர்வீகமாகக் கொண்ட 100 வரையான குடும்பங்கள் 2018 ஆம் ஆண்டில் இரணைதீவிற்குச் சென்று வாழ்ந்து வருவதுடன் கடற்றொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளோ மலசலகூடங்களோ அமைக்கப்படவில்லை. இந்நிலையில் இங்கு வாழ்கன்ற குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்காலிக வீடுகள் கூட முழுமையாக இல்லாத நிலையில் காற்றுடன் கூடிய மழை காலங்களில் தேவாலயத்திலும் மற்றும் பொதுஇடங்களிலும் சென்று வாழ்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் போட்டி போட்டு ஆரம்ப உதவிகளை வழங்கிய அரசியல்வாதிகள் தற்போது இரணைதீவில் உள்ள மக்களின் எதிர்கால வாழ்க்கை தொடர்பாக கவனம் செலுத்துவதில்லை எனவும் இரணைதீவில் அழிக்கப்பட்ட தமது பூர்வீக வீடுகளை அரசாங்கம் மீள அமைத்துத் தர வேண்டும் எனவும் இரணைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத முடிவெடு...

மேற்படி மாணவி இளைஞர் ஒருவரை .காதலித்து வந்துள்ளார். காதலன் அவரை ஏமாற்றியதன் காரணமாக மனம் உளைச்சலுக்கு உள்ளான மாணவி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டில் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சுவாச குழாயில்...

கல்வியங்காட்டைச் சேர்ந்த உமாரமணன் கேதுசன் என்ற குழந்தையே உயிரிழந்ததாகும்.

குழந்தைக்கு சளி ஏற்பட்ட நிலையில் கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி அளவில் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டி விட்டு தூங்கவைத்ததாகவும் இரவு 7.30 மணியளவில் குழந்தை அசைவற்ற நிலையில் காணப்பட்டதால் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு சென்ற நிலையில் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியரால் தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60)

## மின் கட்டணத்தை...

ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆலோசித்து கட்டண உயர்வு குறித்து முடிவெடுக்க இருந்தது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் இது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

உத்தேச கட்டண திருத்தம் குறித்து அமைச்சரவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

தேவைகள், முன்மொழியப்பட்ட கட்டண அமைப்பு, எரிசக்தி முன்னறிவிப்பு மற்றும் நிதி குறித்து அமைச்சர்களுக்கு விளக்கமளித்ததாக அவர் கூறினார்.

அமைச்சரவையின் முன்மொழிவுகள் தொடர்பான அவதானிப்புகளை சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜேசேகர தெரிவித்தார். (ம-7)

## முட்டையை...

டுப்படுத்தும் வகையில் முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முட்டை தொடர்பில் சந்தையில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் விளக்கமளித்த வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ, முட்டையின் விலையை கட்டுப்படுத்த முட்டையை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

அதற்கமைய, முட்டைகளை இறக்கு மதி செய்ய நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## 2023...

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனாவின் மெதுவான வளர்ச்சியே இதற்கு காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

உக்ரைன் போர் மற்றும் அதிக வட்டி வீதங்கள் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதம் என்று கடந்த ஒக்ரோபர் மாதம் சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது.

மேலும், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள சீனா, தனது கொரோனா சுகாதாரக் கொள்கைகளை தளர்த்தியதையடுத்து, பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் 40 ஆண்டுகளுக்குப் பிறகு முதல்முறையாக பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துள்ளதாக கிறிஸ்டலினா ஜியோஜிவா தெரிவித்தார்.

உக்ரைன் போரினால் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கடுமையான பொருளாதார மந்த நிலைக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் கூறினார். (ம-7)

## ஒன்றிணைந்து...

புதுவருடத்தை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் காலை 09.00 மணியளவில் விசேட வைபவமொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். அரச ஊழியர்கள் இதன் போது உறுதிமொழி வழங்கினர். (ம-7)

## நாட்டின் பங்காளி...

ஆரம்பிக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பு அரச சேவையாளர்களிடமே தங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்காக, தங்களது துறைகளில் வினைத்திறனான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

## மண்...

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 420 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் டீசல் நேற்று நள்ளிரவு முதல் 405 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேபோல், முன்னதாக 365 ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நள்ளிரவு முதல் 355 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## ஜன...

மற்றும் பிரதமரின் ஆரம்ப கட்ட இணக்கப்பாட்டுடன் இந்த அமைச்சரவை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ம-7)

## நாய்...

சிசு ஒன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி வத்திராயனில் நேற்று மாலை 6.00 மணியளவில் நாய் ஒன்று சிசுவின் சடலத்தை கொண்டு செல்வதைக் கண்ட அயலவர்கள் நாயிடமிருந்து சடலத்தை மீட்டுள்ளனர்.

உடனடியாக தகவல் மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடம் விரைந்த பொலிஸார் சிசுவின் சடலத்தை பாதுகாத்ததுடன் இது தொடர்பான விசாரணையினை தீவிரப்படுத்தியுள்ளனர்,

மேலும் சிசுவை கொலை செய்திருக்கலாம் அல்லது சிசுவை பிரசவித்து வீசியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பொருட்டு வத்திராயன் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருமணமாகாத பெண் ஒருவர் குழந்தையினை பிரசவித்து பின்னர் சிசுவை மண்ணில் புதைத்ததாகவும் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ம-7,60,64)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1443
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 5 1 5 0 9 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1018
J 06 08 19 34
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 3230
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
U 59 66 76 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 02/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1336
H 20 54 63 77 78

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.02
சீட்டிழுப்பு இலக்கம் 297
மகரம் 13 14 57 58 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/02
சீட்டிழுப்பு இலக்கம் 4988
A 0 2 6 9 9 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1963 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.01.02 தினம் திங்கட்கிழமை
F 27 32 43 45
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,444,680/-

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.02
சீட்டிழுப்பு இல : 4124
வர்ணம் : நீலம்
ரூ. 4,978,880/-
வெற்றி இலக்கங்கள்
28 51 59 65 Z

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,731,181/-
திகதி 2023-01-02
வெற்றி வாரம் 3675
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 01 11 24 55 கன்னி
3826 066
ரூ. 12,082,101/-

29
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 08 10 32 36 72
சீட்டிழுப்பு வாரம் 1139
வர்ணம் இள நீலம்
திகதி 2023.01.02 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 293,543,366.20
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1884
சீட்டிழுப்பு திகதி 2023-01-02
வெற்றி இலக்கங்கள் 07 16 23 56 L
திர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 38,487,084/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1789
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.01.02
ரூ. 3,979,400/-
வெற்றி இலக்கங்கள் 27 34 47 58 M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர்கன் வகுப்புக்கள்



குறுகிய காலத்திற்குள்
அடிப்படையில் இருந்து
விரிவாகக் கற்றுக்
கொடுக்கப்படும்.
குழுவாகவோ தனியாகவோ
உங்கள் இடத்திற்கே
வந்து கற்பிக்கப்படும்.

(14104)

**075 205 1986**

புதிய கல்வியாண்டு - 2023
தரம் - 6

## கணிதம்

ஆசிரியர்
**திரு.T.அற்புதராஜா**
புதிய பிரிவு ஆரம்பம் : வெள்ளிக்கிழமை
(06.01.2023) காலை 7.00 மணி
202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**T.P - 077 722 2478**

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-5732)

Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✔ வயது-22 தொடக்கம் 35
- ✔ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-5732)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 62 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(14110)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 986 5457, 077 026 7619**

# TECHNO WORLD

TECHNO WORLD
INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

## தொழில்நுட்ப கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை

இம்முறை தேசிய, மாவட்ட ரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் ஐந்தாவது முறையாகவும் முன்னிலையில்

**A/L 2024 புதிய பிரிவுகள் ஆரம்பம் - 07.01.2023**

**நேரம் காலை 7.30 மணி**

### உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BIO SYSTMES TECHNOLOGY)

| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. ஹரிகரன் | 3A | 01 | 18. ஜெபர்சன் தற்குரூஸ் | 3C | 10 | 35.திவ்யா | 2BC | 23 |
| 2.தங்குயில் | 2AB | 01 | 19. சதுர்சிகன் | 3C | 11 | 36.தரணீதரன் | B2C | 24 |
| 3.பிரணகா | 3C | 01 | 20.பிரசன்னா | 2CS | 11 | 37. கனீஸ்ரன் | 3S | 24 |
| 4.R.விதுசன் | A2B | 03 | 21.விஸ்வரூபினி | A2B | 12 | 38. ஐங்கரன் | B2C | 25 |
| 5.S.மயூரி | B2C | 03 | 22. ஜென்சிகா | BCS | 12 | 39. பாத்திமா | A2B | 26 |
| 6.S.விதுசன் | 2AB | 03 | 23.நசிகரன் | 2BC | 12 | 40. யதுகுலன் | B2C | 26 |
| 7. சுகன்யா | 3B | 04 | 24.பிரசன்னா | 2CS | 13 | 41. கிருயாளினி | 3C | 30 |
| 8. நவரசி | A2B | 04 | 25.யதுர்சிகா | 2CS | 14 | 42. ருக்சனா | 3C | 31 |
| 9. ஏன்யல் லம்பட் | ABC | 04 | 26.தபீஸ்வரன் | 3B | 15 | 43. பாத்திமா | 2BC | 32 |
| 10. நிறைமதி | 3C | 05 | 27.மதுசாளினி | B2C | 16 | 44. துசிதா | 3C | 32 |
| 11. நிறோஜினி | 2BC | 06 | 28. பர்மிலன் | 3B | 16 | 45.அபிசாயினி | 3C | 33 |
| 12. சியாமளா | B2C | 08 | 29. கஜானி | C2S | 18 | 46. கஜானன் | 3C | 35 |
| 13.துசாந்தன் | BCS | 08 | 30.அனுசா | C2S | 18 | 47.கேசவன் | BCS | 40 |
| 14.பர்வைஸ் | ABC | 09 | 31. கயந்தினி | 3S | 20 | 48.கபில்சன் | B2C | 41 |
| 15. சசிக்கா | 2CS | 09 | 32.யசோபிகா | 2BC | 21 | 49. சதுர்சாயினி | 3C | 41 |
| 16.கஜானா | 3C | 09 | 33. நிறோஜ் | 2BC | 21 | 50.சாருயா | B2C | 44 |
| 17. தனுசா | 2BS | 09 | 34.நிவோதிகா | 2BC | 22 | 51.நிகாஸ் | ABC | 46 |

### பொறியியல் தொழில்நுட்பம் (ENGINEERING TECHNOLOGY)

| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. கிந்துசன் | B2C | 01 | 17.சிந்துசன் | 3C | 11 | 33.அபிஷேக் | 2BC | 27 |
| 2.விதுசன் | 2BC | 01 | 18.சசிகுமார் | 3C | 11 | 34.டிலக்சன் | 2CS | 30 |
| 3. சனோஜன் | B2C | 02 | 19.மதுசன் | 2CS | 11 | 35.குயின்ரா | 2BC | 35 |
| 4. மஹீன் | ABC | 02 | 20. கஜிந்திகன் | A2B | 12 | 36.டிந்துயன் | 2BC | 36 |
| 5. பவாஷ் | 2BC | 02 | 21. அஜித்கர் | 2CS | 12 | 37.பிரசாந் | C2S | 36 |
| 6. நிதுசன் | BCS | 03 | 22. கௌசிகன் | ABC | 13 | 38.துர்சாந்தன் | B2C | 37 |
| 7. கிரிசன் | 2AB | 04 | 23.பிரகாஷ் | 3B | 14 | 39.சார்வ் | 2BC | 38 |
| 8. முகமது நப்றிஸ் | 3B | 07 | 24. லவன் | 2BC | 15 | 40.லோசன் | 3S | 40 |
| 9.றாகுலன் | 3C | 07 | 25.அஞ்சலன் | 3C | 15 | 41.கஜந்தன் | 2BS | 41 |
| 10.துசாந்தன் | BCS | 08 | 26. பிரவின்காந் | ABC | 16 | 42.சபிசன் | B2C | 41 |
| 11.கிரிசாந் | 2AC | 08 | 27.அன்பரசன் | 3B | 16 | 43.அன்ரனிதாஸ் | B2C | 42 |
| 12.பிரியராம் | 2AC | 08 | 28.கரிஸ்குமார் | C2S | 18 | 44.மரியஸ்ரின் | B2C | 43 |
| 13.சாம்சன் | 2AB | 09 | 29.பகிரதன் | 2AB | 19 | 45.கஜன்ராஜ் | 3C | 46 |
| 14. சிந்துயன் | 2CS | 09 | 30.அபிசன் | BCS | 19 | 46.பாத்திமா ஜெஸ்ரா | ABC | 47 |
| 15.சிலோன்ராஜ் | 3C | 10 | 31.கேசவன் | 2BC | 21 | 47. ஜனாத்தனன் | B2C | 48 |
| 16. தர்மிகன் | A2B | 10 | 32.லதுசன் | 2BC | 25 | | | |

**A/L 2023 வகுப்புக்கள் நடைபெறுகின்றன**

(C-5730) **077 017 5346**


# மரண அறிவித்தல்



## திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12.02.1987 | 31.12.2022 |

டச்சு வீதி, வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கப்பம்புலம் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துஸ்ஸாரா கண்ணதாசன் அவர்கள் கடந்த 31.12.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சந்திரகாந்தியம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கண்ணதாசனின் (சுவிஸ்) அருமை மனைவியும் ரனுஜாவின் (யா/ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை) பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற துஷ்யந் மற்றும் சுரேக்கா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மோகனா (அதிபர், யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை), ஜனதா, லோகேஸ்வரன் ஆகியோரின் நேசமிகு மைத்துனியும் ரவிபாலா (பிரதேச செயலகம், சாவகச்சேரி) அவர்களின் உடன் பிறவா சகோதரியும் அஷாந், அஷானி (யா/ ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்பான அத்தையும் டர்விகனின் (B.B.C முன்பள்ளி -சுன்னாகம்) அருமைச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.01.2023) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு.
077 723 8478, 077 886 0049 (14102)

தகவல்:
குடும்பத்தினர்